செய்தி வெளியீடு எண். 132 நாள்: 08.03.2018

**வங்கி மற்றும் கடன் சேவைக்காக சமுதாய ஒருங்கிணைப்பாளர் பணிகளுக்கு உதவி செய்ய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடமிருந்து தகுதி வாய்ந்தவர்களின் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒவ்வொரு கிராம தொகுப்பு அளவிலும் வங்கி மற்றும் கடன் சேவைக்காக சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் சுய உதவி குழு கடன் நிதி மற்றும் கடன் திரும்ப செலுத்துதல் போன்ற ஒருங்கிணைப்பு பணிகளில் உதவி செய்ய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடமிருந்து தேர்வு செய்ய தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவி குழுவிலுள்ள உறுப்பினர்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பரிந்துரை செய்வதன் அடிப்படையில் மாவட்ட தேர்வுக் குழு மூலம் தகுதி தேர்வு நடத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்ட சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் பணி நியமனம் செய்யப்படுவர். இதற்கு திட்டத்திலிருந்து மாதாந்திர மதிப்பூதியமாக ரூ.2000/-ம் வழங்கப்பட உள்ளது.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளருக்கான தகுதிகள் : ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் அதே தொகுப்பைச் சார்ந்தவராக இருத்தல் அவசியம். மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட உறுப்பினராக இருத்தல் வேண்டும். கல்வி தகுதி 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். 35 வயதுக்குட்பட்டு இருத்தல் வேண்டும். நல்ல தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். கணினி திறன் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். SMS (குறுந்தகவல்) அனுப்ப தெரிந்திருத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலமாக மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க மேலாண்மை அலகிற்கு 15.03.2018-க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதர விபரங்களுக்கு இவ்வலுவலக தொலைபேசி எண்: 044–27664528 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**